**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 193/2023**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கோபால்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. தர்மலிங்கம்** | **Calling** | : | |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **42** |
| | | | **Dated** | : | **03.04.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**Both accused present. Both side counsels present.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 3), திரு. **கோபால்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மரமில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 2-வது எதிரியைத் தெரியும். முதல் எதிரியை தெரியாது. அசா. 1, 2 ஐ தெரியும். கடந்த 04.12.2001ம் தேதி மதியம் சுமார் 03.15 மணி இருக்கும். வேம்பு மரம் லோடு நானும், அசா. 2 மற்றும் ரவி ஆகிய நான்கு பேர் இருந்தோம். அசா. 2 பில் போடுவார். அவரை காணவில்லை, போய் பார்த்த போது கேட்டிற்கு வெளியே இரத்தத்தோடு கிடந்தார். அவர் கழுத்தில் காயம் ஏற்பட்டு இருந்தது. அவரை, அவரது காரிலேயே எடுத்துக் கொண்டு போய் JCB மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது, யாரால் காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

போலீசார் விசாரணையில் மேற்படி சம்பவத்தன்று சரவணக்குமார், கோவிந்தராஜூம், மனோஜ் பட்டேலிடம் வாக்குவாதம் செய்து கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது சரவணக்குமார், மனோஜ் பட்டேலை பார்த்து ஏண்டா தேவிடியா மகனே என் தங்கச்சி காளீஸ்வரியை ஏண்டா வேலையை விட்டு தூக்கி விட்டாய் உன்னால் தான் குடும்பத்தில் பிரச்சனையாக இருக்கிறது, நீ இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லிக் கொண்டு, அவர் இடுப்பில் மறைத்து வைத்து இருந்த கத்தியை எடுத்து, மனோஜ் பட்டேலின் கழுத்துக் கீழே குத்தி, அவர் மேலும் மாறி மாறி கத்தியால் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், அப்பொழுது கோவிந்த ராஜ் அசா. 2 ஐ பார்த்து உன் மில்லில் எத்தனை வருடமாக வேலை பார்த்தேன். ரோட்டில வச்சு கொடுத்த காச கேட்கிறாயா தேவியபயலே என அசிங்கமாக பேசிக் கொண்டே, சரவணக்குமார்கையில் வைத்து இருந்த கத்தியை பிடுங்கி இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி மனோஜ் பட்டேலின் இடது பக்க தாடைக்கு கீழ் கத்தியால் மாறி மாறி குத்தினார் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.04.03 18:52:55 +0530